## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சதொச பாதுகாப்பு மற்றும் பொது (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்காக இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 2.36 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் வருமானங்கள் இனங்காண வேண்டியிருந்த போதிலும் நிலையான வைப்பு வட்டி காசு அடிப்படையில் இனங்காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி மற்றும் வட்டி வருமானம் முறையே ரூபா 1,431,031 மற்றும் ரூபா 867,408 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் வருமானங்கள் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 2.52 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்ய முடியாது இருந்த போதிலும் ரூபா 309,028 கூட்டுத் தொகையான செலுத்த வேண்டிய மீதியில் கடன் பட்டோரில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்படுகின்றது. | ஏற்றுக் கொள்கின்றோம். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யாது இருந்தல் வேண்டும். |
| (இ) | பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக வரவு செலவுத் திட்ட படி மற்றும் ஏனைய சம்பளம் செலுத்தாமை தொடர்பாக தொடரப்பட்ட இரண்டு | ஏற்றுக் கொள்கின்றோம். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | வழக்குகள் தொடர்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 21.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்கவைகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் அந்த இரண்டு வழக்கிற்காக கம்பனி 2024 பெப்ரவரி 02 ஆம் திகதி ரூபா 2,909,080 மற்றும் 2024 யூன் 06 ஆந் திகதி ரூபா 4,100,710 செலுத்தியிருந்தது. | | நியமங்களின் பிரகாரம் நிகழத்தக்கவைகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 27.5 மற்றும் 27.7 ஆம் பந்திகளுக்கு முரணாக கடன் பட்டோரிடம் இருந்து அறவிடும் இயலுமை மதிப்பீடு செய்யாமல் கம்பனியால் ரூபா 7,279,541 மாத்திரம் அறவிட முடியாக் கடன் ஒதுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்யும் கடன்பட்டோர் மீதியில் அறவிடக் கூடிய இயலுமை மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| கடன் பட்டோர் மீதி | 85,651,942 | 92,590,887 | 6,938,945 | ஏற்றுக் கொள்கின்றோம். | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் உரிய பட்டோலைளுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 5,078,760 கூட்டுத்தொகையான பெற வேண்டிய பணத்திற்காக விரிவான பட்டோலை, | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்காக |

| | |
|---|---|
| காலப் பகுப்பாய்வு மற்றும் பட்டியல்களும், ரூபா 6,516,494 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய பணத்திற்கான பட்டோலைகள், காலப் பகுப்பாய்வு, வரி கணிப்பிடல் மற்றும் சம்பள அறிக்கைகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 14,992,478 கூட்டுத்தொகையான அட்டுறு செலவினம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) | 3.1 ஆம் பந்தி | கம்பனியின் ஊழியர்களை ஆட்சேர்த்தல் நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம் . | ஊழியர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3.5 ஆம் பந்தி | அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி கம்பனியின் சாரதி ஒருவர் வியாபார, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சிற்கு 2020 நவம்பர் 11 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தார். மேலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 815,660 மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பாக ரூபா 111,099 ஊழியருக்காக செலுத்தப்பட்டிருந்தது. அந்த ஊழியர் 2025 யூன் 30 ஆந் திகதி கணக்காய்வுத் திகதி வரையிலும் அமைச்சில் சேவையில் ஈடுபட்டிருந்தார். | ஏற்றுக் கொள்கின்றோம். | ஏனைய நிறுவனங்களுக்கு ஊழியர்களை விடுவிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். விடுவிக்கப்பட்ட ஊழியருக்கு செலத்தப்பட்ட கொடுப்பனவுகள் அமைச்சில் இருந்து மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015/(i) இன் 02 ஆவது பிரிவு | கம்பனியின் பிரதி பொது முகாமையாளருக்கு சாரதி ஒருவருடன் மாதாந்தம் 30,000 போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் பிரகாரம் அவ்வாறான உத்தியோகத்தருக்கு போக்குவரத்துப் படி ஒன்று செலுத்தும் இடத்தி சாரதி ஒருவர் வழங்காது இருக்க வேண்டியதுடன் இதன் போது சாரதி ஒருவர் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் அந்த உத்தியோகத்தருக்காக சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக கம்பனியின் மூலம் ரூபா | ஏற்றுக் கொள்கின்றோம். | சுற்றறிக்கைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 583,783 தொகை செலவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1 ஆம் பந்தி | 2022/2023 மற்றும் 2023/2024 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | பெறுகை வழிகாட்டிக் கோவைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்தப் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,301,535 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 5,271,216 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 14,030,319 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 24,331,196 இனால் அதிகரித்திருந்த போதிலும் வழங்கப்பட்ட ஊழியர் கிரயம் ரூபா 31,606,186 இனால் அதிகரித்தமை, நிர்வாக செலவினம் ரூபா 2,499,655 இனால் அதிகரித்தமை மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 4,759,549 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 இன் போது கம்பனிக்கு பாதுகாப்பு சேவை வழங்கி இருந்த ஜா-எல சத்தொச மெகா ஸ்டோர்ஸ் இல் ரூபா 4,852,622 தொகை களவு போயிருந்தது. பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து இழப்பீட்டை அறவிடுவதற்காக பரிசோதனை மேற்கொள்ளாமல் கம்பனிப் பொறுப்பு வாய்ந்த தரப்பினரைத் தீர்மானித்து மீளாய்வாண்டில் லங்கா சத்தொச கம்பனியின் பாதுகாப்புக் கட்டணங்களுக்கு எதிராக களவாடப்பட்ட தொகையில் ரூபா 2.4 மில்லியனை ஈடுசெய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்காக பரிசோதனை ஒன்றை நடாத்தி ஈடுசெய்யப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 01 முதல் 2022 திசெம்பர் 31 வரை குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் சத்தொச செயலக கட்டிடத்தில் இருந்து வாடகைக்கு பெறப்பட்டுள்ள கட்டிடத்திற்காக 09 மாதங்கள் குத்தகை வாடகையாக ரூபா 3,066,750 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2023 சனவரி 01 முதல் 2025 யூன் 30 ஆன கணக்காய்வுத் திகதி வரையான காலத்திற்காக குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | வாடகை உடன்படிக்கையை விரைவாக புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மொத்த பாதுகாப்பு சேவை வருமானத்தில் ரூபா 272,675,728 அதாவது 94 சதவீதம் லங்கா சத்தொச கம்பனிக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு சேவையில் இருந்து கிடைத்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வருமான வழிகளை விரிவுபடுத்துவதற்காக ஏனைய சேவைப் பங்களிப்பு மூலங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நாடு முழுவதும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவையை மேற்பார்வை செய்வதற்காக கம்பனி 12 பிரதேச முகாமையாளர்களை நியமித்து இருந்ததுடன் அவர்களின் செயல் முன்னேற்றம், செயலாற்றல் மற்றும் வரைபை மீளாய்வு செய்வதற்காக சரியான நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் மீளாய்வாண்டிற்காக கம்பனியால் அவர்களுக்கு சம்பளமாக ரூபா 13,263,211 செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | பிரதேச முகாமையாளரின் செயலாற்றல்களை மீளாய்வு செய்வதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அலுவலக உதவியளராக அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கு வருகை, சேவை நிலையம் மற்றும் நிறைவேற்றப்பட்ட கடமைகளை உறுதிப்படுத்தாமல் 2021 ஒக்தோபர் முதல் 2024 பெப்ரவரி வரையான காலப்பகுதிக்காக ரூபா 535,906 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்கு முன் வருகை மற்றும் கடமைகளை நிறைவேற்றியமையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 07 மாதங்களுகக்காக வாடகைக்குப் பெறப்பட்ட வாகனத்தை கம்பனியின் தலைவருக்கு வழங்கி போக்குவரத்து வசதி வழங்கப்பட்டிருந்தது. உரிய பெறுகை நடைமுறைகள் பின்பற்றி தெரிவு செய்யப்படாத தனியார் கம்பனிக்காக கம்பனி மாதாந்தம் ரூபா 60,000 முதல் ரூபா 70,000 வரையான வீச்சில் வாடகை செலுத்தியிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி பெறுகை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2025 ஏப்ரல் 08 ஆம் திகதி அதாவது 01 வருடம் 11 மாதங்கள் தாமதத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | குறித்துரைத்த திகதிக்கு முன் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கம்பனிக்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |